**அரையாண்டுத்தேர்வு மாதிரி வினாத்தாள் --- 1 ( 2018 )**

**மேல்நிலை முதலாம் ஆண்டு**

**கணக்குப்பதிவியல்**

நேரம் : 2.30 மணி மதிப்பெண் : 90

## பகுதி --- I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 20 × 1 = 20

1. ஒரு வணிகம் பிறருக்கு செலுத்த வேண்டியவை -------- ஆகும்.
அ) சொத்து ஆ) பொறுப்பு இ) முதல்

2. GAAP என்பது ---------
அ) பொதுவாக ஏற்றுக் கொள்ளடப்பட்ட கணக்கியல் கொள்கைகள்
ஆ) பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள்
இ) பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் வழிமுறைகள்

3. ஒரு நிறுவனத்தின் சொத்துக்கள் மதிப்பு ₹ 80,000 மற்றும் அதன் வெளியாட்களுடனான பொறுப்புகள் ₹ 20,000 எனில், அந்நிறுவனத்தில் முதல் -----------
அ) ₹ 1,00,000 ஆ) ₹ 60,000 இ) ₹ 40,000

4. பற்று மற்றும் வரவு இனங்களை குறிப்பேட்டிலிருந்து பேரேட்டுக் கணக்குகளில் எடுத்து எழுதும் நடைமுறையை இவ்வாறு அழைக்கலாம்.
அ) கூட்டுதல் ஆ) எடுத்தெழுதுதல் இ) குறிப்பேட்டில் பதிதல் ஈ) இருப்புக் கட்டுதல்

5. பேரேட்டிலுள்ள அனைத்துக் கணக்குகளின் பற்று இருப்புகள் மற்றும் வரவு இருப்புகளைக் காட்டும் அறிக்கை ------ எனப்படும்.
அ) இருப்புநிலைக் குறிப்பு ஆ) இருப்பாய்வு இ) திருத்தப் பதிவு

6. கொள்முதல் திருப்ப ஏடு பதிவு செய்வது ------------
அ) சரக்களித்தோருக்கு, உடனடியாக பணம் பெறாமல் திருப்பிய சரக்கு
ஆ) அளித்தவரிடம் உடனடியாக பணம் பெறாமல் திருப்பிய சொத்துகள்
இ) உடனடியாக பணம் பெற்றுக் கொண்டு சொத்து வாங்கியவரிடம் திருப்பியது

7. ரொக்கஏடு ஒரு ----------
அ) துணை ஏடு ஆ) முதன்மைஏடு இ) உரிய குறிப்பேடு
ஈ) துணையேடு மற்றும் முதன்மைஏடு இரண்டும்

8. எந்தச் செலவிற்கு சில்லறை ரொக்கத்திலிருந்து கொடுக்கலாம்?
அ) தபால் செலவு மற்றும் பயணச் செலவுகள் ஆ) மேலாளரின் ஊதியம்
இ) அறைகலன் மற்றும் பொருத்துகைகள் வாங்க ஈ) மூலப் பொருட்கள் வாங்க

9. வங்கி அறிக்கை என்பது ----------
அ) ரொக்க ஏட்டின் ரொக்கப்பத்தியின் நகல்
ஆ) ரொக்க ஏட்டின் வங்கிப்பத்தியின் நகல்
இ) வங்கி புத்தகத்தில் வாடிக்கையாளர் கணக்கின் நகல்
ஈ) வணிகத்தால் விடுக்கப்பட்ட காசோலையின் நகல்

10. இருப்பாய்வைப் பாதிக்காத பிழைகள் -------------
அ) விதிப்பிழைகள் ஆ) அதிகமாகக் கூட்டுதல்பிழைகள் இ) குறைவாகக் கூட்டுதல்பிழைகள்
ஈ) பகுதி விடு பிழைகள்

11. கணினிமயமாக்கப்பட்ட கணக்கியலுக்கு பல்வேறு தொழில் நிறுவனங்கள் மாறிவிட்ட நிலையில், கீழ்க்காணும் எப் பிழைகள் தவிர்க்க முடியாதவையாகின்றன?
அ) பகுதி விடு பிழை ஆ) அதிகமாகக் கூட்டுதல் பிழைகள் இ) விதிப் பிழை



12. நவீன பதிலி சொத்துகளின் வருகையால், சொத்துகளின் மதிப்பு குறைவது -------- எனப்படும்.
அ) வழக்கொழிவு ஆ) காலபோக்கு இ) காலநிர்ணயம்

13. தள்ளுபடி, ரொக்கம் மற்றும் வங்கி பத்திகளுடைய ரொக்க ஏட்டை எவ்வாறு அழைக்கலாம்?
அ) சாதாரண ரொக்கஏடு ஆ) இருபத்தி ரொக்கஏடு இ) முப்பத்தி ரொக்கஏடு
ஈ) சில்லறை ரொக்கஏடு

14. ஒரு நிறுவனம் ₹. 10,000 மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கியது. நிறுவுகைச் செலவாக ₹. 1,000 செலவழித்தது அதன் பயனளிப்புக் காலம் 10 ஆண்டுகள். இறுதி மதிப்பு ₹. 1,000 நேர்க்கோட்டு முறையில் தேய்மானத் தொகை காண,சொத்தின் அடக்க விலை யாது?
அ) ₹. 9,000 ஆ) ₹. 10,000 இ) ₹. 11,000

15. வங்கி வைப்புகள் மீதான வட்டி -----------
அ) முதலின வரவு ஆ) வருவாயின வரவு இ) முதலினச் செலவு

16. இருப்பாய்வில் காணப்படும் எடுப்புகள் ---------
அ) கொள்முதலோடு கூட்டப்படும் ஆ) கொள்முதலிலிருந்து கழிக்கப்படும்
இ) முதலோடு கூட்டப்படும் ஈ) முதலிலிருந்து கழிக்கப்படும்

17. வேறுபட்ட ஒன்று எது?
அ) கூலி ஆ) உள்தூக்கு கூலி இ) வெளித் தூக்குகூலி

18. ஒரு நிறுவனம் வங்கியில் ஒரு நிலைவைப்பில் ₹. 1,00,000 வைத்துள்ளது. அந்த வைப்பின் காலம் 12 மாதங்களாகும். 2018, மார்ச் 31 ஆம் நாள் முடிய உள்ள கணக்காண்டிற்கு 9 % வட்டியில், இது வரை பெற்ற வட்டி ₹. 6,750 எனில், பெறவேண்டிய வட்டி யாது?
அ) ₹. 9,000 ஆ) ₹. 2,250 இ) ₹. 9,650

19. இறுதிச் சரக்கிருப்பு என்பது ஓர் ---------------
அ) நிலையான சொத்து ஆ) நடப்புச் சொத்து இ) புலனாகாச் சொத்து

20. பேரேட்டுக் கணக்குகளை தயாரித்து முடித்தவுடன் அடுத்து தயாரிக்கப்படுவது -----
(அ) வியாபாரக்கணக்கு (ஆ) இருப்பாய்வு (இ) குறிப்பேடு

## பகுதி - II

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 21 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 7 × 2 = 14

21. கணக்கேடுகள் பராமரிப்பை வரையறு.
22. மேலெழுதுதல் என்றால் என்ன?
23. தேய்மானம் என்றால் என்ன?
24. பின்வருவனவற்றை கணக்கியல் சமன்பாட்டின் படி பதிவு செய்து காட்டுக.
(அ) ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ₹. 60,000
(ஆ) ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹. 20,000

25. பின்வரும் விவரங்களைக் கொண்டு இருப்பாய்வினை தயார் செய்யவும்.

| கணக்கின் பெயர் | தொகை ( ₹ ) | கணக்கின் பெயர் | தொகை ( ₹ ) |
|---|---|---|---|
| வாடகை | 7,000 | காப்பீட்டு முனைமம் | 1,200 |
| சட்டச் செலவுகள் | 3,000 | முதல் | 11,200 |

26. கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எந்த துணையேட்டில் பதிய வேண்டும்

அ) ராமனிடமிருந்து சரக்குகளை வாங்கியது ₹.10,000/-

ஆ) ₹. 3000 மதிப்புள்ள சரக்குகளை கவிதா என்பவருக்கு விற்றதில் தரம் குறைவாக இருக்கிறது என்று அவர் சரக்கை திருப்பினார்

27. பின்வருவன முதலினத்தைச் சார்ந்ததா, வருவாயினத்தைச் சார்ந்ததா என வகைப்படுத்துக.

1. கடன்பெற சட்டமுறைச் செலவு செய்தது
2. கட்டப் பராமரிப்புச் செலவு ₹. 10,000

28. கீழ்காணும் பிழைகளின் திருத்திய குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

அ) கபிலுக்கு கடனாக விற்ற சரக்கு ₹.2,000 , கொள்முதல் கணக்கில் தவறுதலாக பதியப்பட்டுள்ளது.

ஆ) மதனிடம் கடனாக கொள்முதல் செய்தது ₹. 30,000 , விற்பனை ஏட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

29. கீழ்காணும் விவரங்களிலிருந்து செலுத்தற்குரிய தேதியைக் கண்டுபிடி.

| மாற்றுச்சீட்டின் தேதி | தவணைக்காலம் | சலுகை நாட்கள் | செலுத்தற்குரிய தேதி |
|---|---|---|---|
| மார்ச் 1 | 2 மாதம் | 3 | ? |
| பிப்ரவரி 28 | 1 மாதம் | 3 | ? |

30. கீழ்கண்ட விவரங்களைக் குறிபேட்டில் பதிவு செய்க:

அ) வங்கியில் செலுத்திய ரொக்கம் ₹. 2,500

ஆ) வங்கியிலிருந்து கடன் பெற்றது ₹. 50,000

## பகுதி - III

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 31-க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** $7 \times 3 = 21$

31. வியாபாரக் கணக்கின் பற்றுப் பக்கம் மற்றும் வரவுப் பக்கத்தில் இடம்பெறும் இனங்கள் யாவை?

32. தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை? ( ஏதேனும் மூன்று )

33. முதலினச் செலவு மற்றும் வருவாயினச் செலவு வேறுபடுத்தவும். ( ஏதேனும் மூன்று )

34. பின்வரும் தொகைகளைக் கொண்டு வியாபாரக் கணக்கினைத் தயாரிக்கவும்.

(1) தொடக்கச் சரக்கிருப்பு ₹.5,700 (2) கொள்முதல் ₹.1,58,000 (3) விற்பனை ₹.2,62,000
(4) விற்பனைத்திருப்பம் ₹.600 (5) கொள்முதல் திருப்பம் ₹. 6000
(6) இறுதிச் சரக்கிருப்பு ₹.300

35. கீழ்க்காணும் விவரங்களிலிருந்து வங்கி சரிக்கட்டும் பட்டியல் தயாரிக்கவும்

i) ரொக்க ஏட்டின்படி பற்று இருப்பு ₹.15000
ii) செலுத்திய காசோலை இன்னும் வங்கியில் வசூலிக்காதது ₹. 1000
iii) விடுத்த காசோலை இன்னும் பணமாக்கப்படாதது ₹. 1500
iv) வங்கி வட்டி ₹. 200

36. கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு தொடக்கப் பதிவினை பதிவு செய்க.

ரொக்கம் ₹. 2000 ; இயந்திரம் ₹. 50000 ; அறைகலன் ₹. 5000 ; கடனீந்தோர் ₹. 13,000
கடனாளிகள் ₹. 18,000



37. கீழ்கண்ட கணக்குகளின் இருப்புகள் இருப்பாய்வில் பற்றுப் பத்தியில் இடம் பெறுமா அல்லது வரவுப் பத்தியில் இடம் பெறுமா எனக் காட்டிடுக:

1. வெளித்தூக்குக்கூலி 2. வாராக்கடன் 3. வட்டிச் செலுத்தியது
4. விற்பனைத்திருப்பம் 5. தொடக்கச் சரக்கிருப்பு 6. பயணச்செலவுகள்

38. இருப்பாய்வு தயாரிக்கப்பட்டு வித்தியாசம் அனாமத்துக் கணக்குக்கு எடுத்துச் செல்லப்பட்டது எனக் கருதி பின்வரும் பிழைகளைத் திருத்தம் செய்யவும்.

(அ) விற்பனை ஏட்டின் கூட்டுத்தொகை ₹. 200 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.
(ஆ) கொள்முதல் ஏட்டில் ₹. 120 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.
(இ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு ஏட்டில் ₹. 80 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.

39. கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு முன்பணமீட்பு முறையில் சில்லறை ரொக்க ஏட்டினை தயார் செய்க.

| 2018 | | ₹. |
|---|---|---|
| மே | 1 ரொக்கம் இருப்பு | 2,900 |
| | 2 வாடகை | 450 |
| | 3 அஞ்சல் தலைகள் வாங்கியது | 115 |
| | 5 ஆட்டோ செலவு | 250 |

40. ஒரு நிறுமம் ₹ 50,000 மதிப்புள்ள கட்டடம் ஒன்றை வாங்கியது. கட்டடத்தின் பயனளிப்பு காலம் 10 ஆண்டுகள். மேலும் அதன் இறுதி மதிப்பு ₹ 2,000. நேர்க்கோட்டு முறையில் தேய்மானத் தொகை மற்றும் தேய்மான விகிதம் கணக்கிடுக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** $7 \times 5 = 35$

41. பின்வரும் விவரங்களிலிருந்து 2017 டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய மொத்த இலாபம் மற்றும் நிகர இலாபம் கணக்கிடவும்.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| கூலி | 2,600 | விற்பனை | 72,250 |
| கொள்முதல் | 32,250 | இதரச் செலவுகள் | 200 |
| தொடக்கச் சரக்கிருப்பு | 7,600 | விளம்பரம் | 500 |
| கொள்முதல் திருப்பம் | 250 | பங்காதாயம்பெற்றது | 2,500 |
| அலுவலக அச்சு எழுதுபொருட்கள் | 250 | பழைய அறைகலன் விற்றதில் நட்டம் | 300 |
| வாடகை | 300 | பொதுச் செலவுகள் | 2,500 |
| விற்பனைத் திருப்பம் | 1,250 | முதலீடுகள் விற்றதில் ஏற்பட்ட இலாபம் | 500 |
| சம்பளம் | 3,000 | செலுத்திய கழிவு | 150 |
| விற்பனை தொடர்பானச் பயணச் செலவுகள் | 1,800 | அலுவலகச் செலவுகள் | 1,600 |

( அல்லது)

கீழ்காணும் நடவடிக்கைகளை குறிப்பேட்டில் பதிந்து பேரேட்டில் எடுத்தெழுதி இருப்பு காட்டுக.

| | | |
|---|---|---|
| 2017 ஜன 1 | தொழில் துவங்கியது | 50,000 |
| 3 | விற்பனை செய்தது | 2,000 |
| 7 | பிரேமிடமிருந்து கொள்முதல் செய்தது | 90,000 |
| 17 | பிரேமிற்கு சரக்கு திருப்பியது | 17,000 |
| 27 | பிரேமின் கணக்கைத் தீர்த்தது | |

42. திரு. காமேஷ் அவர்களின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட இருப்புகளைக் கொண்டு 31. 12. 2017 ஆம் நாளைய இருப்பாய்வு தயாரிக்க.

| | ₹. | | ₹. |
|---|---|---|---|
| ஊதியம் | 12,000 | வங்கிகடன் | 15,000 |
| கடனாளிகள் | 48,000 | பெற்ற தள்ளுபடி | 21,000 |
| சரக்கிருப்பு | 14,000 | கடனீந்தோர் | 29,000 |
| விற்பனை | 50,000 | செலுத்தற்குரிய | |
| எடுப்புகள் | 22,000 | மாற்றுச்சீட்டு | 17,000 |
| | | கொள்முதல் | 36,000 |

( அல்லது )

சந்திரனின் ரொக்கம் மற்றும் தள்ளுபடி பத்திகளுடைய ரொக்க ஏட்டில் கீழ்க்கண்ட நடவடிக்கைகளை பதிவு செய்க.

| 2017 | | ₹ |
|---|---|---|
| நவ 1 | ரொக்கஇருப்பு | 22,000 |
| 2 | ரொக்க விற்பனை | 14,000 |
| 3 | கோவிந்தனுக்கு கடனுக்கு விற்றது | 12,000 |
| 4 | பலராமனிடம் கடனுக்கு கொள்முதல் செய்தது | 27,000 |
| 5 | ரொக்கக் கொள்முதல் | 8,800 |
| 8 | கோவிந்தனிடமிருந்து 2% ரொக்க தள்ளுபடி கழித்தது போக மீதி தொகைப் பெறப்பட்டது | |
| 12 | பலராமனுக்கு ₹. 26,800 பணம் செலுத்தி அவர் கணக்கு முழுவதும் தீர்க்கப்பட்டது | |
| 15 | சொந்த தேவைக்கு பணம் எடுத்தது | 4,000 |
| 28 | ரொக்கம் வங்கியில் செலுத்தியது | 5,000 |
| 29 | மதன் தரவேண்டியது ₹.5,000 , ₹.4,800 செலுத்தி அவர் கணக்கைத் தீர்த்துக் கொண்டார். | |
| 30 | சம்பளம் ரொக்கமாக அளித்தது | 4,000 |

43. ஒரு நிறுவனத்தின் கணக்காளர் இருப்பாய்வு சமன்படாமல் ₹. 922 வித்தியாசம் (கூடுதல்வரவு) இருப்பதை அறிந்தார். அவர் அந்தத் தொகையை அனாமத்துக் கணக்கில் பதிந்து விட்டு, அதைத் தொடர்ந்து பின்வரும் பிழைகளைக் கண்டறிந்தார்.

1. ரொக்க ஏட்டின் வரவுப்பக்கம் உள்ள தள்ளுபடிப்பத்தியின் கூட்டுத்தொகை ₹. 78 பேரேட்டில் எடுத்து எழுதப்படவில்லை.
2. கொள்முதல் ஏட்டின் கூட்டுத் தொகையில் ₹. 1,000 குறைவாக உள்ளது.
3. கடனுக்கு நடராஜனுக்கு ₹. 375 - க்கு சரக்கு விற்றது, விற்பனைஏட்டில் ₹. 735 என்று பதிவு செய்யப்பட்டுள்ளது.
4. மேகலாவுக்கு கடனுக்கு ₹. 700 க்கு சரக்கு விற்றது, கொள்முதல் ஏட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிழை திருத்தப் பதிவுகளை தந்து அனாமத்துக் கணக்கைத் தயாரிக்கவும்



( அல்லது )

கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு திரு. சந்திரனின் தனிப்பத்தி ரொக்க ஏடு தயார் செய்க.

| 2012 டிசம்பர் | | ₹. |
|---|---|---|
| 1 | ரொக்க இருப்பு | 80,000 |
| 7 | ரொக்கம் கொடுத்து சரக்கு வாங்கியது | 25,000 |
| 9 | குருவிடமிருந்து சரக்கு கடனுக்கு வாங்கியது | 6,000 |
| 12 | சோமுவுக்கு சரக்கு கடனுக்கு விற்றது | 8,000 |
| 14 | குருவிற்கு செலுத்தியது | 6,000 |
| 17 | சோமுவிடமிருந்து ரொக்கம் பெற்றது | 8,000 |
| 20 | வியாபார செலவுகள் செய்தது | 10,000 |
| 21 | கிருஷ்ணாவிடமிருந்து காசோலை பெற்றது | 10,000 |
| 27 | கழிவு பெற்றது | 5,000 |

44. ஜூலை 1, 2015 ஒரு நிறுவனம் ₹. 1,00,000 மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கியது. குறைந்து செல் இருப்பு முறையில் ஆண்டுதோறும் 20% தேய்மானம் நீக்கப்படவேண்டும். நிறுவனம் தனது கணக்குகளை ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31-ல் முடிக்கிறது. 31.12.2017 வரை இயந்திரக்கணக்கு தயாரிக்கவும்.

( அல்லது )

பின்வரும் நடவடிக்கைகளை 2017 டிசம்பர் மாதத்திற்கான, கண்ணனின் கொள்முதல் மற்றும் விற்பனை ஏடுகளில் பதிவு செய்க.

| 2017 ` | | ₹. |
|---|---|---|
| டிசம்பர் 1 | சுமதியிடமிருந்து சரக்கு கடனுக்கு வாங்கியது | 17,800 |
| டிசம்பர் 4 | இராணிக்கு கடனுக்கு சரக்கு விற்றது | 15,200 |
| டிசம்பர் 6 | மணியிடம் கடனுக்கு சரக்கு வாங்கியது | 7,000 |
| டிசம்பர் 10 | சரண்யாவிற்கு கடனுக்கு சரக்கு விற்றது | 12,500 |
| டிசம்பர் 17 | ஹுசேனுக்கு கடனுக்கு சரக்கு விற்றது | 13,250 |
| டிசம்பர் 21 | இரகுநாதனிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது | 10,000 |
| டிசம்பர் 26 | ஷியாமிடம் ரொக்கத்திற்கு சரக்கு விற்றது | 3,000 |

45. கீழ்க்காணும் விவரங்களிலிருந்து வங்கி சரிக்கட்டும் பட்டியல் தயாரிக்கவும் :

| | | |
|---|---|---|
| i) | ரொக்க ஏட்டின்படி பற்று இருப்பு | ₹. 14,500 |
| ii) | விடுத்த காசோலை இன்னும் பணம் ஆக்கப்படாதவை | ₹. 1,700 |
| iii) | வங்கி முன்னிலைப்படுத்தப்படாத காசோலை. | ₹. 8,000 |
| iv) | வங்கி அளித்த வட்டி | ₹. 1,800 |
| v) | வங்கி கட்டணம் | ₹. 1,200 |

( அல்லது )

பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுகளில் விடுபட்ட தகவல்களை நிரப்புக.

<u>பிரதீப் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்</u>

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2018 ஆகஸ் 1 | ---------- ப<br>----------<br>( தொழில் தொடங்கியது ) | | 25,000 | ---------- |
| 13 | அலுவலக செலவுகள் க / கு ப<br>கொள்முதல் க / கு<br>( ---------------------------) | | 1,000 | ---------- |
| 21 | ------------ ப<br>----------<br>( வங்கியிலிருந்து எடுத்தது) | | --------- | 12,600 |
| 25 | பாபு க / கு ப<br>விற்பனை க / கு<br>( ----------------- ) | | 12,000 | 12,000 |
| 26 | காப்பீட்டு முனைமம் க / கு ப<br>வங்கி க / கு<br>( ----------------- ) | | 1,5000 | --------- |
| 30 | ------------ ப<br>----------<br>( விற்பனைக்கு பணவைப்பு இயந்திரம் மூலம் பெற்றது ) | | --------- | 12,600 |

46. திரு.மதன் என்பவர் ஒரு அறைகலன் கடை நடத்தி வருகிறார். அவர் தன்னுடைய பேரேட்டு இருப்புகளிலிருந்து இருப்பாய்வு ஒன்றை தயாரித்துள்ளார். அந்த இருப்பாய்வு சமன் படவில்லை. அவர் அதனை சரியாக தயாரித்துள்ளாரா என்பதனை கண்டறிக.

| விவரம் | பே.ப.எ | பற்று ( ₹ ) | வரவு ( ₹ ) |
|---|---|---|---|
| முதல் | | | 4,20,000 |
| கட்டடம் | | 1,15,000 | |
| இயந்திரம் | | | 60,000 |
| அறைகலன் கொண்டுவர செலவு செய்தது | | 79,000 | |
| தொடக்கச் சரக்கிருப்பு | | | 86,000 |
| கொள்முதல் | | | 94,000 |
| விற்பனை | | 1,96,000 | |
| பற்பல கடனாளிகள் | | 16,200 | |
| வாரா ஐயக்கடன் ஒதுக்கீடு | | | 7,300 |
| கைவச ரொக்கம் | | | 25,000 |
| வங்கிவச ரொக்கம் | | 84,700 | |
| சம்பளம் | | | 94,000 |
| வாடகை செலுத்தியது | | 48,000 | |
| அளித்த கழிவு | | 1,400 | |



| | | | |
|---|---|---|---|
| வருமான வரி | | 5,800 | |
| காப்பீடு | | 2,400 | |
| பொதுச் செலவுகள் | | | 800 |
| கடனீந்தோர் | | | 89,000 |
| மொத்தம் | | 5,48,500 | 8,76,100 |

( அல்லது )

**கீழ்க்காணும் விவரங்களிலிருந்து திரு. வெங்கடேசன் என்பவரின் ஏடுகளில் 2017, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபர இலாப நட்டக் கணக்கையும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயாரிக்கவும்.**

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 2,500 | சம்பளம் | 2,600 |
| கொள்முதல் | 3,300 | முதல் | 52,000 |
| விற்பனை | 7,000 | வங்கி ரொக்கம் | 6,400 |
| கூலி | 2,700 | செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டுகள் | 7,500 |
| பெற்ற தள்ளுபடி | 2,500 | இறுதிச் சரக்கிருப்பு | 4,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுகள் | 52,000 | கடனீந்தோர் | 500 |

47. கீழ்க்காணும் செலவினங்களையும், வரவினங்களையும் முதலினமா அல்லது வருவாயினமா என வகைப்படுத்துக.

i) நிலைச் சொத்து வாங்குவதற்காக, இயக்குனரின் வெளிநாட்டுப் பயணத்திற்கு செலவழிக்கப்பட்டத் தொகை ₹. 10,000.
ii) பெறுதற்குரிய கடனாளிகளிடமிருந்து அந்தவருடத்தில் பெற்ற தொகை.
iii) மூன்று ஆண்டுகளுக்கு பயனளிக்கும் வகையில் செய்யப்பட்டவிளம்பரச் செலவு..
iv) தீயினால் இயந்திரத்தில் ஏற்பட்ட பாதிப்பிற்காக பெறப்பட்ட காப்பீட்டுரிமைத் தொகை.
v) பழைய மகிழுந்து வாங்கியது ₹. 30,000 மேலும், அதனை உடனடியாக பழுது பார்த்ததற்கானச் செலவு ₹. 2,000

( அல்லது )

2017, டிசம்பர்31 ஆம் நாளன்று, கீழ்க்கண்ட சரிக்கட்டுதல்களுக்குத் தேவையான சரிக்கட்டுப் பதிவுகள் தருக

i) கொடுபட வேண்டிய சம்பளம் ₹. 1,200
ii) கட்டடத்தின் மீது தேய்மானம் ₹. 3,000
iii) முன்கூட்டிச் செலுத்திய காப்பீட்டு முனைமம் ₹. 450
iv) முதலீடுகள் மீதான கூடியுள்ள வட்டி ₹. 400
v) போக்கெழுத வேண்டிய வாராக்கடன் ₹. 200